விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை (05.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 260

## அச்சுவேலியில் மின்னல் தாக்கி உயிரிழந்தவரின் இறுதிச் சடங்கு

**நூற்றுக்கணக்கானோர் பங்கேற்பு**



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தவரின் இறுதிச் சடங்கில் பல நூற்றுக்கணக்கானோர் திரண்டு பேரணியாக சுடுகாடு வரைசென்று இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றினர்.

அச்சுவேலி நாவற் 15

## நாட்டில் மாதமொன்றுக்கு 10 ஆயிரம் பேர் உயிரிழுப்பர்

**அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை**

(கொழும்பு)
நாட்டில் தற்போது காணப் படும் கொரோனா அச்சுறுத்தல் நிலைமையானது தொடர்ந்து நீடித்தால் எதிர் வரும் நாட்களில் 15

## அலங்காரக் கந்தனுக்கு இன்று தேர்



15

## காத்தான்குடியைச் சேர்ந்தவரே நியூசிலாந்தில் கத்திக்குத்து

**தந்தை, சகோதரி கனடாவில்**



(கொழும்பு)
நியூசிலாந்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் இனால் ஈர்க்கப்பட்டு கத்திக்குத்துத் தாக்குதலை மேற்கொண்டவர் 15

### யாழில் அதிகரிக்கும் கோவிட் மரணங்கள்

# வைத்தியசாலைகளில் தேங்கும் சடலங்கள்

## பாதுகாப்பதிலும் தகனம் செய்வதிலும் கடும் நெருக்கடியில் சுகாதாரத்துறை



*(யாழ்ப்பாணம்)* யாழில் அதிகரித்துள்ள கொரோனா மரணங்கள் காரணமாக வைத்தியசாலைகளில் சடலங்கள் தேங்கிக் கிடக்கின்றன. கொரோனாவால் மரணிப்பவர்களின் சடலங்களைப் பாதுகாப்பாக வைப்பதிலும் தகனம் செய்வதிலும் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நிலைமையைச் சமாளிக்க முடியாமல் சுகாதாரத் துறையினர் திணறி வருகின்றனர்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

### கொரோனாவால்
## ஒரே நாளில் 145 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனாத் தொற்றினால் மேலும் 145 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத் 15

## மதுச்சாலைகள் பூட்டப்பட்டுள்ளதால் ரூ.16,000 கோடி அரசுக்கு நாட்டம்

(கொழும்பு)
தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் அமுலபடுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் அரசுக்கு 16 ஆயிரம்கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது 15

## காரைநகரில் பிசிஆருக்கு சென்ற வைத்திய அதிகாரி மீது தாக்குதல்

**மூவர் பொலிஸாரால் கைது**

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி மீதும் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் காரைநகரைச் சேர்ந்த மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து 15

## ஒக்ரோபர் 2ஆம் திகதிவரை முடக்கத்தை நீடிக்க வேண்டும்

**இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்து**

(கொழும்பு)
நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முடக்கத்தில் காணப்படுகின்ற தளர்வு நிலைமையால் முடக்கத்தின் மூலமான நேர்மறையான பிரதிபலனைப் பெறமுடியாமல்போகும்.

எனவே தற்போதுள்ளதைப் போன்ற 15

## கொரோனா +3,333

(கொழும்பு)
இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து333 பேருக்குகொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட் 15


**தமிழ்த் தேசிய கட்சிகள் ஒருமித்து**

## ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு அறிக்கை

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்து ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளன.

அரசாங்கம் தமிழர் தாயகப் பரப்பில் கட்டவிழ்த்துவிட்ட தமிழ் இனத்துக்கு எதிரான நடவடிக்கைகளை அறிக்கை யிடுவது என தமிழ் 15

### யாழில் 5 பேர் உட்பட
## வடக்கில் 10 பேர் கோவிட்டால் மரணம்



(யாழ்ப்பாணம்)
யாழில் 5 பேர் உட்பட வடக்கில் மேலும் 10 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 5 பேர் 15

# பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலகவின் மறைவு ஈடுசெய்ய முடியாதது

## பேராசிரியர் என். சண்முகலிங்கன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

தீர்க்க தரிசனம் மிக்க கல்வியாளர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாதது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் கல்விப்புல சமூக மேம்பாட்டில் பெரும் பங்களித்த பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக தனித்துவமானவர். அவரது புலமைத்துறை பொறியியல் ஆயினும் சமூக விஞ்ஞான உள்ளொளியுடன் செயற்பட்ட ஒரு சமூகப் பொறியியலாளராகவே அவரின் தரிசனம் வாய்த்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், வயம்ப பல்கலைக்கழகத்தின் வேந்தர், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர், உயர் தொழிநுட்ப கல்வி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் என அவர் பணி எல்லை விரிந்தது. அவரது பணிகளுக்கெல்லாம் மகுடமாக இளைஞர் அமைதியின்மை தொடர்பான அவர் தலைமையில் அமைந்த ஜயதிலக அறிக்கை விளங்கியது என்றால் மிகையில்லை. கல்விச் சீர்திருத்தத்துக்கான அவரின் முன்மொழிவுகளும் வழிகாட்டல்களும் காலத்தினாலானவை. இன்றைய எங்கள் மேம்பாட்டுத் திட்டமிடலில் பெரிதும் கவனம் பெற வேண்டியவை.

இத்துணை பெருமைகளிடையேயும் ஆரவாரம் இல்லாத அவர் பக்குவம் எங்களுக்கெல்லாம் பெரும் பாடமாக விளங்கியது. அவரோடு பழகக்கிடைத்த பொழுதுகளின் பெறுமதி நெஞ்சில் என்றென்றும் நிலைத்திருப்பது. தீர்க்க தரிசனம் மிக்க அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது என்றுள்ளது. (ம-03)

# கொரோனாவால் மேலுமொரு வைத்திய அதிகாரி மரணம்

(கொழும்பு)

ஆனமடுவ பிரதேச மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி வைத்தியர் வசந்த ஜயசூரிய கொரோனாத்தொற்றுக்காரணமாக உயிரிழந்துள்ளதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடவத்தையில் வசிக்கும் ஜெயசூரிய, இரண்டு குழந்தைகளின் தந்தையாவார்.

நீர்கொழும்பு பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சில காலம் பணியாற்றி வந்த அவர், பின்னர் ஆனமடுவ சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டார்.

சுமார் 10 நாட்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட அவர் அங்கொட கொரோனா சிகிச்சை பிரிவில் இறந்தார். (ம-03)

# வவு. உலுக்குளம் காட்டுப் பகுதியில் கசிப்பு தயாரிக்கும் இடம் பொலிஸாரால் முற்றுகை

## ஒருவர் கைது

(வவுனியா )

வவுனியா உலுக்குளம் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று நேற்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா உலுக்குளம் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, செட்டிகுளம் பகுதி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் செனவிரட்ண வீரக்கோன் அவர்கள் தலைமையில், உலுக்குளம்பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின்போது கசிப்பு தயாரிப்பதற்கு பயன்படும் நான்கு பரல்கள், 100 லீற்றர் கோடா, வயர்கள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், இது தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணையின் பின் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உலுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3, 250,299)

# கோதுமை மாவுக்கு சந்தையில் தட்டுப்பாடு

(கொழும்பு)

கோதுமை மாவுக்கு தற்போது சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசியப்பொருட்களைப் பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதைத் தடுக்க நுகர்வோர் விவகார அதிகார சபை தொடர்ந்தும் சோதனைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதுவரையில் மேற்கொண்ட திடீர் சோதனையில் 32 ஆயிரத்து 597 மெட்ரிக் தொன் சீனி மற்றும் 643.5 மெட்ரிக் தொன் நெல் மீட்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை வவுனியா கோவில்குளம் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் அரிசி மற்றும் கோதுமை மாவை நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தக நிலையமொன்று சுற்றிவளைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# வவுனியாவில் மேலும் 116 பேருக்கு கோவிட்

வவுனியாவில் மேலும் 116 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் 116 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-03,250,299)

# மரண அறிவித்தல்



## சின்னப்பிள்ளை முருகேசு

**பிறப்பு : 10.08.1931 இறப்பு : 01.09.2021**

குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வல்லிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை முருகேசு கடந்த 01.09.2021 (புதன்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டியார் - பாறுபதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை, நடராசா, தங்கமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பச்சைமால்மருகன், விமலேந்திரன், சாந்தலிங்கம், கோபாலகிருஸ்ணன் (லண்டன்), விமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற விஜயராணி, இசைகுமாரி (லண்டன்), கௌரிமலர் (உப தபால் அதிபர் - புலோலி), கௌரி (லண்டன்), கருணாமூர்த்தி (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மாமியும் அகிலன் (Lead Software Consultant பொறியியலாளர் - லண்டன்), சர்வதனன் ( IT Support Analyst - லண்டன்), வினோதன் (Needa Pvt Co-Ltd Director), திவாகரன் (பொறியியலாளர்), மேனகா (செலான் வங்கி), மயூரி, கார்த்திகா (கணக்காளர் - லண்டன்), கஸ்தூரி (லண்டன்), சாமிதன், சாருஜன், சங்கரன், சாய்கரன், சாகித்தியன் (லண்டன்), தேவகி (கணக்காளர் - லண்டன்), சுதர்சன், பிறேம்செல்வன் (லண்டன்), சுதாகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), பிரதீபன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அட்சனா, அட்சரன், ஆதித்தியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். (C-2615)

வல்லிபுரம்,
புலோலி.

சாந்தலிங்கம் (மகன்) - 021 205 6624
கருணாமூர்த்தி (மருமகன்) - 021 205 6625

தகவல்:
குடும்பத்தினர்

# அதி அபாய சிவப்பு வலயத்துக்குள் இலங்கை

## மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் தற்போது பதிவாகும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இலங்கை அதி அபாய சிவப்பு எச்சரிக்கை மட்டத்திலேயே இருக்கின்றது என இலங்கை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அச்சங்கத்தின் உப தலைவர் விசேட வைத்தியர் மனில்க சுமன திலக ஊடகங்களிடம் கூறியதாவது,

'நாட்டிலுள்ள தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் தொற்றுப் பரவல் விகிதத்தின் அடிப்படையில் இலங்கையானது அதிஅபாய சிவப்பு வயமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது.

இதனை பச்சை வயமாக மாற்றிக்கொள்ள அதாவது சுற்றுலாப் பயணிகளுக்கு வருவதற்கு உகந்த சூழல் ஏற்பட வேண்டுமெனில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 950 ஆகக் குறைய வேண்டும்.

நாளாந்தம் மேற்கொள்ளப்படும் கொரோனா பரிசோதனைகளில் 2.5 சதவீதத்துக்கும் குறைவான தொற்றாளர்களே அடையாளம் காணப்படும் பட்சத்தில் பச்சை வலயத்துக்குள் வரலாம்.

பயணக்கட்டுப்பாடு ஊடாக இதுவே எதிர்பார்க்கப்படு கின்றது' என அவர் தெரிவித்தார். (நி-4)

## 99.9 சதவீதம் பாதுகாப்பு பெறக்கூடிய முகக்கவசம் அறிமுகம்



(கொழும்பு)

கிருமிகளிடம் இருந்து 99.9 சதவீதம் பாதுகாப்பு பெறக்கூடிய முகக்கவசம் ஒன்றை பெரதெனியா பல்கலைக்கழக ஆய்வு குழு நிர்மாணித்துள்ளது.

நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள ஏற்றுமதித்துறையை மீளவும் கட்டியெழுப்ப இந்த முகக்கவச உற்பத்தி கைகொடுக்கும் என பெரதெனியா பல்கலைக்கழக ஆய்வுக் குழு தெரிவித்துள்ளது.

இந்த முகக்கவசமானது வெளிநாடுகளில் நல்ல வரவேற்ப்பையும் பாராட்டையும் பெற்றுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.டி.மாவங்ச தெரிவித்துள்ளார். (நி-4)

## வீதியால் சென்ற பெண்ணின் ஒரு பவுண் தங்கச் சங்கிலி அறுப்பு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி - செட்டியார்மடம் பகுதியில் பெண் ஒருவரது ஒரு பவுண் சங்கிலி திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,குறித்த பெண்ணும் அவரது உறவினரும் நேற்று அராலி வீதியால் யாழ்ப்பாணத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்களை கீழே தள்ளி விழுத்திவிட்டு சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7-104)

## மல்லாகத்தில் மிதிவெடி மீட்பு

(அராலி)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்லாகம் - மில் வீதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றிலிருந்து மிதிவெடி ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியின் உரிமையாளர் காணியினை சுத்தம் செய்யும்போது குறித்த வெடி பொருள் அவதானிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. குறித்த மிதிவெடியினை இன்றைய தினம் மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7-104)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கோற்றம் 04 ❖ 01 ❖ 1952

மறைவு 17 ❖ 08 ❖ 2020



ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும்
லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.திரு. வேலன் பாலேந்திரன்

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ இறைவன் இடைநடுவில் பறித்துவிட்டான்
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய் அடைக்கலம் தந்த உம்மை
ஆண்டவன் ஏன் அழைத்தான்
பண்புள்ளோரைப் பலகாலம் வாழவிடக்கூடாதென்றோ?
என்செய்வோம் இறைவன் சித்தம் இது
இனி காணமுடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகிறோம்

(C-2614) அன்னாரை நினைவுகூரும் உறவினர்கள்



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் ஒருமுகத் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)

## தமிழின அழிப்பிற்கு நீதிகோரி பிரித்தானியாவில் ஈருருளிப் பயணம்





(லண்டன்)

சிங்களப் பேரினவாத அரசினால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணை வேண்டியும் தமிழர்களுக்கு தமிழீழமே நிரந்தர தீர்வு என்பதனை வலியுறுத்தியபடி கடந்த வியாழக்கிழமை பிரித்தானியாவின் பிரதமர் இல்லத்தில் இருந்து மனித நேய ஈருருளிப் பயணம் ஆரம்பிக்கப்பட்டது.

20.09.2021 அன்று ஐ.நா. முன்றலில் நடைபெற இருக்கும் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஒருமித்த குரலாக தமிழர்களின் வேணவாவினை பறைசாற்ற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 2ஆம் நாள் ஆட்டம்
# இங்கிலாந்து 99 ரன் முன்னிலை



இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறுகிறது. முதலில் பட்டிங் செய்த இந்திய அணி, முதல் இன்னிங்சில் 191 ரன்களில் ஓல் அவுட் ஆனது. அதிகபட்சமாக ஷர்துல் தாகூர் 57 ரன்கள் எடுத்தார். கப்டன் விராட் கோலி 50 ரன் எடுத்தார்.

இதையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 53 ரன்கள் எடுத்திருந்தது. மலான் 26 ரன்களுடனும், ஓவர்டன் ஒரு ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.நேற்று முன்தினம் 2ஆம் நாள் ஆட்டத்தின் போது ஓவர்டன் ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். டேவிட் மலான் 31 ரன்கள் மட்டுமே சேர்த்தார். நிதானமாக ஆடிய பேர்ஸ்டோ 37 ரன்களும், மொயீன் அலி35 ரன்களும் எடுத்து அவுட் ஆகினர். ஒருபுறம் சீரான இடைவெளியில் விக்கெட் சரிந்தபோதும், மறுமுனையில் பொறுமையுடன் ஆடிய ஓல்லி போப் 81 ரன்கள் குவித்து நம்பிக்கை அளித்தார். கடைசி நேரத்தில் அதிரடியாக ஆடிய கிறிஸ் வோக்ஸ் அரை சதம் அடித்தார். ஆனால் அந்த ஓவரின் கடைசி பந்தில் ரன் அவுட் ஆனார். இதனால் இங்கிலாந்து அணி 290 ரன்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. முதல் இன்னிங்சில் இந்தியாவைவிட 99 ரன்கள் முன்னிலை பெற்றது.(4-6)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்; சிட்டிசிபாஸ் வெளியேற்றம்



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் மூன்றாம் நிலை வீரரான கிரீஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்டெபனோஸ் சிட்சிபாசும், ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கார்லோஸ் அல்கராஸ் கார்பியாவும் மோதினார்கள்.

ஆரம்பம் முதலே இருவரும் சிறப்பாக ஆடினர். முதல் செட்டை கார்பியா 6-3 என கைப்பற்றினார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக 2ஆவது செட்டை சிட்சிபாஸ் 6-4 என வென்றார்.

மூன்றாவது செட்டை கார்பியா 7-6 என போராடி கைப்பற்றினார். நான்காவது செட்டில் வீறு கொண்டெழுந்த சிட்சிபாஸ் 6-0 என முழுமையாக வென்றார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் ஐந்தாவது செட்டை கார்பியா 7-6 என்ற கணக்கில் மீண்டும் போராடி கைப்பற்றினார்.

இறுதியில், கார்பியா 6-3, 4-6, 7-6, 0-6, 7-6 என்ற செட் கணக்கில் வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். இந்தப் போட்டி சுமார் 4 மணி நேரத்திற்கு மேல் நடைபெற்றது.

இதன் மூலம் சிட்சிபாஸ் அதிர்ச்சி தோல்வி அடைந்து அமெரிக்க ஓபன் தொடரில் இருந்து வெளியேறினார். (4-6)

# மீண்டும் மைதானத்திற்குள் நுழைந்த ஜார்வோ

பொலிஸாரால் கைது



இங்கிலாந்து-இந்தியா இடையேயான 4ஆவது டெஸ்ட் போட்டியின் போது பிரிட்டிஷ் யுடியூபர் ஜார்வோ மீண்டும் மைதானத்திற்குள் அத்துமீறி நுழைந்து இடையூறு ஏற்படுத்தியது பரபரப்பை ஏற்படுத்தியது.

இங்கிலாந்து-இந்தியா அணிகளுக்க இடையேயான 4ஆவது டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடை பெற்று வருகிறது.

நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்டத்தின் போது இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் விளையாடி வந்தது. இந்திய பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் பந்து வீச தயாராக ஒலிபோப் துடுப்பாட, எதிரில் பேரிஸ்டோ இருந்தார்.

இதன் போது திடீரென மைதானத்திற்கு அத்துமீறி நுழைந்த ஜார்வோ, ஒலிபோப்-இற்கு பந்து வீசுவது போல் ஓடி வந்து பேரிஸ்டோ மீது மோதினார்.

இதனையடுத்து, பாதுகாவலர்கள் அவரை மைதானத்திலிருந்து இழுத்துச்சென்று வெளியேற்றினர்.

பேரிஸ்டோ மீது மோதியதால் தாக்குதலில் ஈடுபட முயன்றதாக சந்தேகத்தின் பேரில் பொலிஸார் அவரை கைது செய்தனர். (4-6)

# இரண்டாவது இருபது-20
# பங்களாதேஷிடம் வீழ்ந்தது நியூசிலாந்து



நியூஸிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில், பங்களாதேஷ் அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில், 2-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

டாக்கா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 141 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, நயீம் 39 ஓட்டங்களையும் மொஹமதுல்லா ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 142 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் அந்த அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டாம் லதம் ஆட்டமிழக்காது 65 ஓட்டங்களையும் வில் யங் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 32 பந்துகளில் 5 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட மொஹமதுல்லா தெரிவு செய்யப்பட்டார். (4-6)

## இராசிபலன்

05.09.2021
ஆவணி 20, ஞாயிற்றுக்கிழமை
திரியோதசி முற்பகல் 7.58 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 6.46 மணிவரை
சுபநேரம் 9.05 - 10.35 மணிவரை
இராதுகாலம் 4.35 - 6.05 மணிவரை
சந்திராஷ்டமம்: உத்தராடம், திருவோணம்
நல்லைக்கந்தன் தேர், வல்லிபுர ஆழ்வார் கொடியேற்ற தினம், ஆவணி ஞாயிறு.

வளவன்

**மேஷம்**: வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர்.

**ரிஷபம்**: உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்**: கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**கடகம்**: உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் செல்லும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்**: எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், சயனச் சுக குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் வாய்ப்புண்டு, செய் தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்**: கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கிடைக்கும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்**: வருங்கால நலன்கருதி எடுத்த புது முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு**: கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டிய நாள், கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் இனிமை சேரும் நாள், காரிய அனுகூலமுண்டு, பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழிவகைகளை கையாள்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்**: நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்ளுவீர்கள், பிள்ளைகளால் பெருமை காணும் நாள்.

எதையும் துன்பம் என்று நினைத்தால் தான் துன்பம்

# இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களை அரசாங்கம் தடை செய்ய வேண்டும்

## ஞானசார தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

**இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கையுடன் தொடர்புடைய அனைத்து அமைப்புக்களையும் நிபந்தனையற்ற வகையில் தடை செய்ய அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் நியூஸிலாந்தில் மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த நபர் ஒருவர் பல்பொருள் அங்காடி ஒன்றில் மேற்கொண்ட கத்திக்குத்துத் தாக்குதல் தொடர்பில் ஞானசார தேரர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நியூஸிலாந்தின் ஒக்லாந்து நகரில் மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்து தாக்குதல் தொடர்பில் இலங்கை அதிகளவில் அவதானம் செலுத்த வேண்டும். மேலும் இஸ்லாமிய அடிப்படைவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுமாறு தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அழுத்தம் பிரயோகிக்கின்றமையை அரசாங்கம் ஒருபோதும் கருத்திற் கொள்ளக்கூடாது எனவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அஹமட் ஆதில் மொஹமட் சம்சுதீன் என்ற பெயரால் அடையாளப்படுத்தப்பட்ட நபரால் கத்திக்குத்து தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதாக நியூஸிலாந்து புலனாய்வு பிரிவினர் உறுதிப் படுத்தியுள்ளனர். இந்நபர் 2017 ஆம் ஆண்டு நியூஸிலாந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு பேஸ்புக் பக்கங்கள் ஊடாக இஸ்லாம் மத தீவிரவாதத்தை வளர்ப்பதற்கான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இருப்பினும் மனித உரிமை காரணிகளையும் ஏனைய பொது காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எனினும் இவரை நியூஸிலாந்து பாதுகாப்பு தரப்பினர் அவரை இரகசியமாக கண்காணித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)



கல்முனைக் கடற்கரையில் மீனவர் ஒருவருக்கு 12 அடி நீளமுடைய கொப்புறா மீன் நேற்று பிடிபட்டது. இதன் எடை சுமார் 300 கிலோ கிராம் இருக்கும் எனவும் இதன் விலை சுமார் 3 இலட்சம் வரை இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கொவிட் பரிசோதனைகளை செய்யும் தனியார் மருத்துவமனை தொடர்பில் ஆராயுமாறு ஆலோசனை

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் அனுமதியின்றி பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை முன்னெடுக்கும் தனியார் வைத்தியசாலைகள் தொடர்பில் ஆராயுமாறு பிராந்திய சுகாதார அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யாது கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ளும் அவ்வாறான தனியார் வைத்தியசாலைகளை பதிவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கொரோனா பரிசோதனைகளின் பின்னர் தொற்று உறுதிப் படுத்தப்படுபவர்கள் தொடர்பிலான தகவல்களை பிராந்தியத்திற்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பிராந்திய விசேட தொற்றுநோய் நிபுணருக்கு அறிவிக்குமாறும் சுகாதார அமைச்சு குறித்த தனியார் வைத்தியசாலைகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தனியார் வைத்தியசாலைகளில் கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்பவர்கள், தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மருத்துவ ஆலோசனையின்றி செயற்படுவதால் மரணத்தை எதிர்கொள்ளும் நிலை காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனால் வீடுகளில் நிகழும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)

# முப்பது லீற்றர் கசிப்புடன் கெருடாவிலில் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு முப்பது லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெருடாவில் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட ராஜபக்ஷ தலைமையிலான பொலிஸ் குழுவினர் கசிப்பு உற்பத்தி இடத்தினை முற்றுகையிட்டு முப்பது லீற்றர் கசிப்பு, உற்பத்திக்கு பயன்படுத்திய பொருட்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியதுடன் 32 வயதான சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான முயற்சிகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (4-7-30)

# இராணுவ ஆட்சியை நோக்கி அரசாங்கம் நகர்வு

(யாழ்ப்பாணம்)

**இராணுவ ஆட்சியை நோக்கி அரசாங்கம் நகர்வதாக மக்கள் சந்தேகிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியுள்ளதாவது,

'இலங்கையினுடைய பொருளாதாரம் பாரிய பின்னடைவை எதிர்கொண்டுள்ளது.

மக்கள் ஒரு நேரம் உணவு உட்கொள்ள முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அத்தியாவசிய பொருட்களின் விலை ஒவ்வொரு நாளும் உயர்ந்து கொண்டு இருக்கின்றது.

கொரோனா அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில் முடக்கங்கள் தாமதமாக வந்தாலும் கூட, அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை.

அதாவது, மக்கள் அதிகளவான இடங்களில் ஒன்று கூடுவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனை பொலிஸ் உள்ளிட்ட உரிய அதிகாரிகளும் கவனத்தில் கொள்வதாக தெரியவில்லை.

இதேவேளை அனைத்து விடயங்களையும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் அரசாங்கம் தீவிரமாக இருக்கின்றது. அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு, ஒரு இராணுவ ஆட்சியை நோக்கி நகர்கின்றதை போல மக்கள் மத்தியில் பயத்தினை உருவாக்கியுள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-6)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம் பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ ந.யோகானந்ரேஸ்வரக் குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7-6)

## ஊரடங்கை மீறியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில்தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தினை மீறி வீதியில் பயணித்தோருக்கு எதிராக கோப்பாய் பொலிஸாரால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கோப்பாய் பொலிஸாரால் நேற்று விசேட சுற்றுக் காவல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அத்தியாவசிய சேவை தவிர்ந்து வீதியில் பயணித்தோர் மற்றும் பயணத்தடை வேளையில் சுகாதார நடைமுறையினை பின்பற்றாது வீதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டோரின் விபரங்கள் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்குட்படுத்தும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது. (4-7-33)

## சடலங்களை எரிக்க கட்டணம் செலுத்த முடியாதோர் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்

### யாழ். மாநகர முதல்வர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கொவிட் தொற்றுக்குள்ளாகி இறப்பவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு யாழ்.மாநகர சபையினால் 6 ஆயிரத்து500 ரூபாய்கட்டணம் அறவிடப்படுகின்றது.

எனினும் குறித்த கட்டணத்தை செலுத்த முடியாதவர்கள் யாராவது தனிப்பட்ட முறையில் என்னை தொடர்பு கொண்டால் அவர்களுக்கு என்னால் உதவ முடியும் என யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர ஆளுகைக்குள் உள்ள மின் மயான தகனம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தைப்பொறுத்தவரையில் கொவிட் தொற்றினால் மரணிப்பவர்கள் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைந்துள்ள மின் தகன மயானத்தில் தகனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த மயானம் யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்டது. குறித்த மயானத்தில் நாளொன்றுக்கு 5 உடல்கள் தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

எனினும் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை சடலங்களை எரிய தற்கான முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் மருத்துவ மனைகளில் அதிகளவிலான சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன.

நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எரியூட்டுவதற்கான தகைமை எம்மிடம் இல்லை. அதையும் மீறி நாங்கள் ஒன்று இரண்டு சடலங்களை கூடுதலாக ஏரியூட்டும் போது குறித்த ஏரியூட்டி அடிக்கடி பழுதடையக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

எனவே எரியூட்டும் தகைமையை அதிகரித்து எமக்கு இன்னுமொரு ஏரியூட்டியை வழங்குமாறு நாம் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

குறித்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எம்மால் ஏரியூட்ட முடியும் எனவும் தெரிவித்தார். (4-7-18-33)




## எப்பவோ முடிந்த காரியம்

அள்ள அள்ள இனிக்கும், அழகொழுகு முருகா,
கொள்ளை வரமோடு வருகிறாய்- பிள்ளை
மொழி கொண்டுநாம்பாட, விடிவு தரவேண்டும்
பழிதீர்க்க விழிகாட்டப்பா!

எப்பவோ முடிந்த காரியம், எல்லாமே நின்செயல்,
தப்பவேண்டும் உலகம் இப்பவே-இப்புவி
தொல்லை வினைதீரச் சூழும் தளை நீங்க
நல்லையே நமக்கு விடை

கலாபூஷணம்
கே.எஸ். சிவஞானராஜா

## ஊரினில் கொரோனாவை அழித்திடு

உலகமே வடம்பிடித்த நல்லூரான் தேரோட்டமன்று
உள்வீதிதனிலே மயிலோனின் தேரோட்டமின்று
ஓம் முருகாவுந்தன் அருட்காட்சிக்கேது பஞ்சம்
ஓம் அலைவரிசை தானெமக்குத் தற்போது தஞ்சம்
தேரினில் அழித்தனுக்குப் புறப்படும் கந்தா
ஊரினில் கொரோனாவை அழித்திடு முழுதாய்

சிவராஜா கிரிதரன்
ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

## அழகா முருகா...

அழகென்ற சொல்லுக்கு அகராதி நீ ஐயா!
அலங்காரக் கந்தனை மிஞ்சுவது யார் ஐயா!
அலைகடலாய் மக்கள் சூழ நீ பவனி வரும்போது
அன்பர் தம் கண்களில் ஆனந்த மழை ஐயா!
கற்பனைக்கும் எட்டாத தீஞ்சுவையே முருகா
கல்லைக்கூட மனிதனாக்கும் இரட்சகன் நீ ஐயா!
கண் எதிரே உனைக் காணும் காலம்
கைகூடுவது எப்போது ஐயா!

தர்ஷிகா குணபாலன்
பண்டத்தரிப்பு.

## தேவர் சிறைமீட்ட செல்வா

நாம் செய்த பிழைகளை பொறுத்தருள்வீர்
எம்மை சிறைமீட்க மாட்டாயோ?
முருகா ஏன் இந்த மௌனம்,
போர்க்கால சூழலில் எம்மை எல்லாம் காத்தீரே?
இப்போது ஏன் எம்மைக் கைவிட்டீர்?
எமக்கு ஒருவழியும் தெரியவில்லை- நல்லைக் கந்தா
உம்மை நேரில் காணாது தவிக்கின்றோம்
பொறுத்ததுபோதும் எம்மைக் காத்தருள்வீர்?
ஆறுமுகா உமது கடைக்கண் பார்வையே போதும்
எம்மையும் உலகையும் காக்க
உமது வருகைக்காக காத்திருப்பேன்
தேரடியில் செல்லப்பர் போல்...

க.லோகானந்தம்,
உரும்பிராய்.

## அழித்திடப்பா அடியோடு கொரோனாவை

ஆனைமுகன் தம்பியே ஆறுமுகனே
ஆண்டுகள் பலகாலம் வீதியெல்லாம் விரைந்திடுவோம்
வீரியம் கொண்ட வைரஸ் நின்று
வீதியெல்லாம் அடியார்களை விரட்டுதப்பா!
தேனாறும் பாலாறும் தேர்ந்தவனே- நீர்
வள்ளி தெய்வயானை மணாளனே!-ஐயா
வெற்றிவேல்தனை கையெடுத்து
அழித்திடப்பா அடியோடு கொரோனாவை!

நயினைக் கதிர் பேரர்கள்
பானுசன், ரவுசன், அக்சயன், ஹரிஸ்,
பிரசதீஸ், யஸ்வின்

# தென்னாபிரிக்க கொவிட் பிறழ்வும் இலங்கைக்குள் நுழையக்கூடும்

## மீண்டும் எச்சரிக்கிறார் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

**(கொழும்பு)**

**இந்தியா மற்றும் பிரித்தானியாவில் இனங்காணப்பட்ட வைரஸ் பிறழ்வுகள் நுழைந்ததைப் போலவே தென்னாபிரிக்க பிறழ்வும் இலங்கைக்குள் நுழையக்கூடும்.**

எனவே இதனை எதிர்கொள்வதற்காக பிரத்தியேக ஏற்பாடுகள் எவையும் இல்லை. ஆரம்பம் முதல் பின்பற்றி வருகின்ற தனிமைப்படுத்தல் விதிமுறைகளையே பின்பற்ற வேண்டும் என்று பிரதிசுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியளாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் பிறழ்வுகள் இந்தியா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளில் இனங்காணப்பட்டாலும் மக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளின் காரணமாக அந்தப் பிறழ்வுகள் இலங்கையிலும் பரவத் தொடங்கின.

எனினும் ஆபிரிக்க நாடுகளில் இனங்காணப்பட்ட பிறழ்வுகள் இலங்கையில் பரவவில்லை.

எவ்வாறிருப்பினும் ஐரோப்பிய நாடுகள் அல்லது மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்பவர்கள் , அங்கிருந்து வருபவர்கள் ஊடாக எந்தவொரு வைரஸ் பிறழ்வுகளும் நாட்டுக்குள் நுழையக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

எந்தவகையான புதிய பிறழ்வுகள் இனங்காணப்பட்டாலும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கென பிரத்தியேக முன்னேற்பாடுகள் செய்யப்படுவதில்லை.

ஆரம்பத்தில் செய்யப்பட்டதைப் போலவே எந்தவொரு நாட்டிலிருந்து வருபவர்களும் கொவிட் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்படுவர்.

அது மாத்திரமின்றி சகலரும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவதே பிரதானமானது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# 301 கிலோ ஹெரோயினுடன் வெளிநாட்டவர் 7 பேர் கைது

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதி கடற்பரப்பில் 301 கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் வெளிநாட்டைச் சேர்ந்த மீன்பிடிப் படகொன்று நேற்றுக் காலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தப் படகில் பயணம் செய்த வெளிநாட்டவர் 7 பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து கடற்படை உளவுத் துறையினர் மற்றும் கடற்படையினர் இணைந்து தென்னிலங்கை கடற்பரப்பில் இந்தக் கப்பலைத் தேடி மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது ஹெரோயினுடன் 7 பேரும் சிக்கினர். (நி-4)


நடேஸ்வர அன்னையின் வாழ்த்துகள்
சேவை நலன் பாராட்டு



திருமதி. புஸ்பநாயகி திரவியச்செல்வம் (SLTS-1)
( பயிற்றப்பட்ட ஆசிரியர், வர்த்தகம்)

சேவை விபரம்

| | |
|---|---|
| கிளி/ உருத்திரபுரம் ம.வித்தியாலயம் | 06.08.1988 11.05.1990 |
| கிளி/ இந்து மகா வித்தியாலயம் | 14.05.1990 23.01.1993 |
| யா/ பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை- | 24.01.1992-31.12.1993 |
| கிளி/ இந்துக் கல்லூரி- | 03.01.1994-31.12.2007 |
| கிளி/ புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம்- | 02.01.2008-19.01.2011 |
| யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை- | 20.01.2011-21.11.2013 |
| யா/ நடேஸ்வரக் கல்லூரி- | 22.11.2013-04.09.2021 |

கல்விச் சேவையில் 33 வருடங்கள் ஆசிரியப் பணியை நிறைவு செய்து இன்று மணிவிழாக் காணும் திருமதி புஸ்பநாயகி திரவியச்செல்வம் அவர்கள் ஓய்வுக்காலத்தில் சகல வளங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ அன்னை புவனேஸ்வரி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம், யா/ நடேஸ்வரக் கல்லூரி.


# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## துன்பங்களைப் போக்கும் புரட்டாதி சனிக்கிழமை



**சனிக்கிழமை விரதம்**

புரட்டாதி சனிக்கிழமை விரதம் இருப்பவர்கள் முதலில் வீட்டில் பூஜை அறையை சுத்தம் செய்து கோலமிட வேண்டும். பின்னர் அலமேலு மங்கையுடன் கூடிய வேங்கடேசப் பெருமாள் படத்தை அலங்கரிக்க வேண்டும். இரு பக்கங்களிலும் ஐந்து முக குத்து விளக்கை ஏற்றிவைக்க வேண்டும். பூஜைக்குரியனவற்றை சேகரித்து வைத்து, ராகு காலம், எமகண்டம் நேரம் இல்லாமல் நல்ல நேரத்தில் மாவிளக்கேற்றி பூஜிக்க வேண்டும். சர்க்கரைப் பொங்கல், வடை, எள் சாதத்தை நிவேதனமாக படைக்கலாம்.

இந்த புரட்டாதி சனிக்கிழமை விரதத்தை மேற்கொண்டால் குல தெய்வத்தின் அருள் கிடைக்கும். செல்வம் செழிக்கும். துன்பங்கள் விலகும். எந்த விரதமானாலும் பகலில் தூங்கக் கூடாது.

வெற்றிலை, பாக்கு போடக் கூடாது. மது, மாமிசத்தை விலக்கி பாவம் செய்வதை தவிர்க்க வேண்டும். அனைத்து உயிர்களிடத்தும் கருணை உள்ளவர்களாக இருக்க வேண்டும். (தொடரும்)

# பாரிய நெருக்கடிக்குள் இலங்கையர்கள்; அரசும் தோல்வி என்கிறார் கரு ஜயசூரிய

(கொழும்பு)

பாரிய நெருக்கடிக்குள் இலங்கையர்கள் சிக்கித் தவிப்பதாகவும் மக்கள் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் வேளையில் அவர்களின் சுதந்திரத்தை அரசாங்கம் பறிக்கின்றதெனவும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களில் ஏற்பட்டுள்ள விலையேற்றம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை செயற்திறனான வகையில் பகிர்ந்தளிப்பதில் அரசாங்கம் தோல்வியடையும் வேளையில், அவசரகால சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

இதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் ஒரு கிலோகிராம் சீனியின் சந்தை விலை 85 ரூபாயாக காணப்பட்டதுடன், போதுமானளவு சீனிகையிருப்பில் உள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டி னார். (நி-4)

# கடன் பெற்றவர்களுக்கான சலுகைக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

தற்போதைய கொவிட் நிலைமையை கருத்திற்கொண்டு வங்கிகளில் கடன் பெற்ற வர்த்தகர்கள் மற்றும் ஏனையவர்களுக்கான கடன் சலுகையை இலங்கை மத்திய வங்கி நீடித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை இந்தச் சலுகையை நீடிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற வணிக நிறுவனங்களுக்கு சுற்று நிருபத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கொவிட் பரவலினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் முன் வைத்த கோரிக்கைகளை கருத்திற்கொண்டு இந்த தீர்மானத்தை எட்டியுள்ளதாகவும் கடன் பெற்ற வர்த்தகர்கள் மற்றும் தனிநபர்களின் கோரிக்கைக்கு அமைய, வங்கிகள் இந்தச் சலுகையை வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-4)

# ஆப்கான் ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே பெண்கள் போராட்டம்

(காபூல்)

**புதிதாக உருவாகவுள்ள ஆப்கானிஸ்தான் அமைச்சரவையில் பெண்களின் பங்கும் இருக்க வேண்டுமென அந்நாட்டு பெண்கள் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர்.**




இந்நிலையில், காபூலில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே நேற்று முன்தினம் கூடிய பெண்கள் அமைச்சரவையில் பெண்களுக்கு பங்களிக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், ஆப்கானில் மனித உரிமைகளை நிலைநாட்ட வேண்டுமெனவும், பழைய நிலைக்குத் திரும்ப முடியாதெனவும் பதாகைகளுடன் கோஷங்களை எழுப்பினர்.

மேலும், ஆப்கான் பெண்களின் கல்வி, சமூகம், பேச்சு சுதந்திரம், அரசியல் உள்ளிட்டவைக்கு முழு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர். (7-4)

# வ.உ.சியின் பிறந்தநாளை முன்னிட்டு முதல்வரால் 14 அறிவிப்புகள் வெளியீடு



(சென்னை)

சுதந்திரப் போராட்டத்தில் தீரத்துடன் ஈடுபட்டு 'செக்கிழுத்த செம்மல்' என மக்களால் புகழப்படும் வ.உ. சிதம்பரனாரின் 150ஆவது பிறந்த தினத்தை ஒட்டி 14 புதிய அறிவிப்புகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இந்த அறிவிப்பின்படி, வ.உ.சிக்கு சென்னை, கோவை என இரண்டு இடங்களில் புதிதாக சிலை வைக்கப்படவுள்ளது.

மேலும் சென்னை காந்தி மண்டபத்தில் வ.உ.சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் பொலிவூட்டப்பட்டு அவரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்படும். தூத்துக்குடி மாநகரில் முதன்மைச்சாலை வ.உ.சிதம்பரனார் சாலை என அழைக்கப்படும்.

தனது வாழ்நாளின் முக்கிய நாட்களைக் கோவைச் சிறையிலேயே கழித்த வ.உ.சிதம்பரனாரின் முழு உருவச் சிலையானது, கோவை வ.உ.சி பூங்காவில் அமைக்கப்படும்.

கப்பல்கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் அளிக்கப்படும் என்று தனது அறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (7-4)

# ஐடா புயல்; பலி 63 ஆக உயர்வு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் வீசி வரும் ஐடா புயலில் மற்றும் கன மழைக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 63ஆக கடந்துள்ளது. கரீபியன் கடலில் கடந்த மாதம் 26 ஆம் திகதி உருவான ஐடா புயலால் நாட்டின் வடகிழக்குப் பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக நியூயோர்க் நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்தன. மேலும் பல கார்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

இதனால் மேரிலாண்ட் மாகாணம் முதல் கனெக்டிகட் மாகாணம் வரையிலான பகுதிகளில் 47 பேர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் நியூஜெர்சி மாகாணத்தைச் சேர்ந்த 23 பேரும் அடங்குவர் என்று அந்த மாகாண ஆளுநர் பிலிப் மர்ஃபி தெரிவித்துள்ளார்.

இது தவிர, நியூயோர்க் நகரில் ஐடா புயலுக்கு மேலும் 13 பேர் பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர். (7-4)

# நியூசிலாந்தில் 6 மாதங்களின் பின்னர் முதல் கொவிட் மரணம்

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் கடந்த 6 மாதங்களின் பின்னர் முதலாவது கொவிட்-19 மரணம் பதிவாகியுள்ளது.

90 வயதான பெண் ஒருவரே நேற்று முன்தினம் உயிரிழந்ததாக வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி கொவிட் மரணம் இறுதியாக பதிவானதையடுத்து, ஆறு மாதங்களின் பின்னர் இந்த மரணம் இடம்பெற்றுள்ளது.

உடல்நலக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த பெண், ஆக்லாந்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் உயிரிழந்தார்.

இதேவேளை, டெல்டா திரிபு கட்டுப்பாட்டுக்குள் வரும் அறிகுறி தென்படுவதாக நியூசிலாந்து சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (7-4)

# தகுதிபெற்ற 5.2 மில்லியன் கனேடியர்கள் எந்தவொரு தடுப்பூசியையும் பெறவில்லை

## மருத்துவர் தெரசா டாம்



(ஒட்டவா)

கனடாவில் கொவிட்-19 தொற்று நோய்ப் பரவலின் தற்போதைய போக்குத்தொடர்ந்தால் இந்தமாத இறுதியில் முன்னொருபோதும் இல்லாத வகையில் நெருக்கடி உச்சத்தை எட்டும் என மத்திய அரசின் புதிய மாதிரிக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய மாதிரிக் கணிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுக் கருத்து வெளியிட்ட கனடா தலைமை பொதுச் சுகாதார அதிகாரி மருத்துவர் தெரசா டாம், இதுவரை தடுப்பூசி போட்டுக்கொள்ளாத 18 முதல் 39 வயதிற்குட்பட்ட கனேடியர்களின் வீதம் அதிகமாகவுள்ளது. இத்தகையவர்கள் அவசரமாகத் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

இளையவர்கள், வேலை மற்றும் பொழுது போக்கு காரணங்களுக்காக அதிகம் வீடுகளை விட்டு வெளியேறும் தரப்பினராக உள்ளனர். இதனால் அவர்கள் மத்தியில் தொற்று வீதம் அதிகரித்துள்ளது என அவர் கூறினார்.

ஜூலை நடுப்பகுதியிலிருந்து ஓகஸ்ட் நடுப்பகுதி வரையான தரவுகளின் பிரகாரம் தடுப்பூசி போடப்பட்டவர்களை விட தடுப்பூசி போடாதவர்கள் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்படும் வீதம் 12 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் மருத்துவமனை சேர்க்கை 36 மடங்கு அதிகமாகவும் இருப்பதாகவும் டாம் குறிப்பிட்டார்.

தடுப்பூசி பெறத் தகுதியான 5.2 மில்லியன் கனேடியர்கள் இதுவரை எந்தவொரு கொவிட்-19 தடுப்பூசியையும் பெறவில்லை என கனடா பொதுச் சுகாதார நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இவ்வாறு தடுப்பூசியைத் தவிர்ப்பவர்கள் அதிக ஆபத்துப் பிரிவினராக உள்ளனர் என டாம் கூறினார். (7-4)

# பஞ்ஷீர் மாகாணம் மட்டும் தலிபான்களுக்கு எதிராக போராடுகிறது

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலுக்கு அருகில் இருக்கும் பஞ்ஷீர் மாகாணத்தைக் கைப்பற்றி விட்டதாக தலிபான்கள் கூறுவது உண்மைக்குப் புறம்பானது என பஞ்ஷீர் போராளிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் பஞ்ஷீர் மாகாணப் போராளிகளில் முக்கிய நபரான அம்ருல்லா சலே, தப்பி ஓடிவிட்டதாக செய்திகள் வெளியாகிய நிலையில், அதை மறுத்து அம்ருல்லா சலே தாமே காணொளிப் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா உட்பட மேற்குலகப் படைகள் பின்வாங்கத் தொடங்கி ஒரு சில வாரங்களிலேயே, தலிபான்கள் ஆப்கானிஸ்தானை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும், 1.5-2.0 இலட்சம் பேர் வாழும் பஞ்ஷீர் மாகாணம் மட்டும் தலிபான்களுக்கு எதிராக தொடர்ந்து போராடி வருகின்றது.

இந்த மாகாணப் படையில் முன்னாள் ஆப்கான் அரசப் படை வீரர்கள், உள்ளூர் ஆயுதமேந்திய வீரர்கள் இருக்கின்றனர். (7-4)

# கிளிநொச்சி மாவட்டத்திற்கு திறைசேரியிலிருந்து 9.4 மில்லியன் நிதி

(தர்மபுரம்)

கொரோனாவினால் கிளிநொச்சி மாவட்டத்தில் 38 இறப்புகளும் 4,885 தொற்றாளர்களில் 2,374 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு அமைய சதொச, கூட்டுறவு சங்கங்கள் ஊடாக சீனி நியாய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 39 ஆயிரத்து 500 கிலோ கிராம் சீனிஎமது மாவட்டத்திற்கு கிடைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட் 19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கென திறைசேரியில் இருந்து ரூபா.9.4 மில்லியன் நிதி கிடைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் 3,691 தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது திறைசேரியில் இருந்து நிதி கிடைத்திருப்பதன் காரணமாக 1,590 குடும்பங்களுக்கு ரூபா.10,000 உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

திறைசேரியில் இருந்து நிதி



கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே உணவுப் பொருட்கள் விநியோகத்தில் தாமதங்கள் இருந்தன.

ஆனால் தற்போது நிதி கிடைத்திருப்பதால் கொவிட் 19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகம் விரைவாக நடைபெறுவதாகவும் தெரிவித்தார். (7-4-316-350)

## மன்னாரில் மின் தகன நிலையம் அமைக்க நிதி உதவி கோரப்படுகின்றது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உடனடியாக மின்தகன நிலையத்தை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையினால் மாவட்டத்தில் உள்ள அனை வரது ஒத்துழைப்பும் எதிர் பார்க் கப்பட்டுள்ளது.

மின் தகன நிலையத்தை மன்னார் நகரசபை பிரிவில் உள்ள மன்னார் பொது மயான பகுதியில் அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மின் தகன நிலையத்தை அமைப்பதற்கும் வாகனத்திற்கு பணம் கொடுத்து சடலங்களை அனைவராலும் ஏற்றி வர முடியாது என்பதினால் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யவும் சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுகிறது.

நிதி போதாமை காரணமாக அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டில் உள்ள நண்ப ர்கள், தனவந்தர்கள் முன் வந்து உதவி செய்ய முன்வர வேண் டும் என கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

நிதி உதவியை செய்ய விரும்பும் நல் உள்ளங்கள் இலங்கை வங்கியில் 939 526 என்னும் கணக்கு இலக்கத்திற்கு officers welfare society kach cheri எனவும் விபரம் தகனம் (crem atorium) எனவும் குறிப்பிட்டு நிதியை வைப்புச் செய்ய முடியும். (7-4-6-285)



கிளிநொச்சி மாவட்டத்தின் பாரதிபுரம் மத்தி, பாரதிபுரம் வடக்கு, பாரதிபுரம் தெற்கு, பொன்னகர் வடக்கு ஆகிய கிராமங்களில் கொவிட் 19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள 36 குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பொதிகள் NOWWOW நிறுவனத்தினால் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்: கிருஷ்ணகுமார்)

## வடபகுதி மீனவர்களுக்கும் தமிழ் நாட்டு மீனவர்களுக்குமிடையே முரண்பாட்டை ஏற்படுத்த அரசு முயற்சி

(முறிகண்டி)

எல்லை மீறிய இந்திய மீனவர்களினுடைய பிரச்சனை மூலம் இந்த அரசாங்கம் தமிழ் நாட்டு மீனவர்களையும் எமது வடபகுதி மீனவர்களையும் முட்டிமோத வைக்கின்ற ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்துவதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் இன்ப நாயகம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற முரண்பாடுகள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பாக அதற்கான தீர்வை பெறுகின்ற வகையில் நாங்கள் செயற்பட்டு வருகிறோம். அந்த வகையில் அண்மைக்காலமாக குறிப்பாக வட பகுதியில் வடமராட்சி, வடமராட்சி கிழக்கு போன்ற பிரதேசங்களில் இந்திய இழுவைப்படகினுடைய வருகை அதிகரித்து காணப்படுகிறது.

இதனால் அப்பிரதேச மீனவர்கள் பாரிய இழப்புகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை அதிகரித்துள்ளது.

இந்தச்சந்தர்ப்பத்திலே தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் அந்த விடயங்களுக்கு தீர்வு காணக்கூடிய வகையிலே பல் வேறுபட்ட தீர்வு முயற்சிகளை மேற்கொண்டு வந்த பொழுதிலும் அரசாங்கம், அரசாங்க கட்சிகள், அரசியல் தலைமைகள், அவற்றிற்கு தீர்வு வழங்கக்கூடிய வகையில் கையாளாமல் வெறுமனே ஒரு அரசியல் நோக்கத்திற்காக, அரசியல் இலாபத்திற்காக, பயன்படுத்துகின்ற போக்கை அவதானிக்க முடிகிறது.

இது தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் எமது வடபகுதிமீனவர்களுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த சந்தர்ப்பமாக மாறுகிறது. அரசாங்கம் அரசியல் மற்றும் ஏனைய நோக்கங்களுக்காக இந்த விவகாரத்தை கையாளுவது வெட்டவெளிச்சமாக தெரிகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.(4-7-100)

## கிளிநொச்சியில்

# பாதுகாப்பாக இருங்கள் தொனிப்பொருளில் கொவிட் தடுப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

(முறிகண்டி)

"பாதுகாப்பாக இருங்கள்" எனும் தொனிப்பொருளில் கொவிட் ஒழிப்பு வேலைத் திட்டம் நேற்று கிளிநொச்சியில் கிளிநொச்சி ஊடக மையத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்த சுகாதார துறையினர், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள், பொது மக்களின் ஆத்ம சாந்திக்கான விசேட ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், கொவிட் பாதிப்பிலிருந்து நாடும் உலகமும் பாதுகாக்கப்படவும் விசேட வழிபாடும் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ந்து குறித்த வேலைத்திட்டத்தின் முதல் நாளான நேற்றைய தினம் கிளிநொச்சி கல்வி, கலாசார அபிவிருத்தி அமையத்துடன் இணைந்து கிளிநொச்சிசுகாதார சேவைகள் பணிமனையில் கர்ப்பவதிகளிற்



கான மாதாந்த சிகிச்சைக்கு வருகை தந்திருந்தவர்களிற்கு முக கவசங்கள், தொற்று நீக்கி திரவங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து சதோச விற்பனை நிலையம், மீன், மரக்கறி விற்பனை நிலையங்களில் கூடியிருந்த மக்கள், ஊழியர்கள், வர்த்தகர்களிற்கும் முக கவசங்கள், தொற்று நீக்கி திரவங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை கூட்டமாக நிற்றலை தவிர்க்கவும் சமூக இடைவெளிகளைப் பின்பற்றி கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருந்து பாதுகாப்பாக செயற்படுமாறு அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் மக்களுக்கு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (7-4-100-316)

# சீனியைப் பெற்றுக் கொள்ள வரிசையில் நிற்கும் மக்கள்



(குருமன்காடு)

அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை அறிவித்துள்ளதுடன், அப் பொருட்களை நாடு பூராகவும் உள்ள சதொசமற்றும்கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாகவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வவுனியா மாவட்டத்தில் உள்ள 13 சதொச விற்பனை நிலையங்களிலும் மக்கள் நீண்ட வரிசையில் நின்று சீனியைப் பெற்றுக் செல்கின்றனர். ஒருவருக்கு மூன்று கிலோ வீதம் சீனி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில்குறைந்தவிலையில் சீனியைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகளவிலான மக்கள் கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் சதொவிற்கு வருகை தந்து சீனியைப் பெற்று செல்வதையும், சீனி கிடைத்தமையால் மகிழ்ச்சிதெரிவிப்பதையும் அவதானிக்க முடிந்தது. (7-4-6-250)

# இணைய வழி செலவுகளை ஈடுசெய்யவே ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவு

## கல்வி அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



(கொழும்பு)

இணையவழி கற்பித்தலுக்கான செலவுகளை ஈடு செய்யும் நோக்கிலேயே, ஆசிரியர், அதிபர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒன்றரை ஆண்டுகளாக அரசாங்கம் அவர்களுக்கான வேதனத்தை உரியவாறு வழங்கி வருகிறது.

இந்த நிலையில், தற்போது ஆசிரியர், அதிபர்களுக்கு இணையவழி கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஏற்பட்டுள்ள மேலதிக செலவுகளுக்காகவே, இரண்டு மாதங்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# தொல்பொருள் இடங்களை பராமரிக்க 520 இலட்சம் ரூபாய் அன்பளிப்பு

## இலங்கைக்கு வழங்கிய அமெரிக்கா

(கொழும்பு)

17ஆம் நூற்றாண்டு புராதன கண்டிய மன்னர் அரண்மனை மற்றும் தொல் பொருள் அருங்காட்சியகம் போன்றவற்றை அபிவிருத்தி செய்து பாதுகாக்க அமெரிக்கா 520 இலட்சரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இது பற்றி அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளது,

கண்டி நகரில் சமய கலாச்சார ரீதியில் முக்கியத்துவம் பொருந்திய வரலாற்றிடங்களை பாதுகாப்பதன் மூலம் சுற்றுலாத்துறைமற்றும் பொருளாதாரத் துறையை அபிவிருத்தி செய்து அவற்றை பாதுகாப்பதை ஊக்குவிக்கும் முகமாக அமெரிக்கா உதவ முன்வந்துள்ளது.

இதற்காக 17ஆம் நூற்றாண்டு முதல் கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் அமையப்பெற்ற புராதன கண்டிய மன்னர் அரண்மனை மற்றும் தொல் பொருள் அருங்காட்சியகம் போன்றவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கலாசார பாதுகாப்பிற்கான அமெரிக்க தூதுவரின் நிதியம் ஊடாக உதவித்தொகை ஒன்றை வழங்கியுள்ளதாக தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா அரசு வழங்கியுள்ள இந்நிதி இலங்கைப் பெறுமதியில் 520 இலட்ச ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# திடீரென உயிரிழக்கும் விலங்குகள்



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் கொரோனாத் தொற்றின் வேகம் உச்சம் பெற்றுள்ளதும் அதனால் ஏற்பட்டுள்ள மரணமும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பருந்து மற்றும் வளர்ப்பு நாய்கள் திடீரென உயிரிழந்து விழுவதாகவும் இந்த சம்பவத்தால் மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தென்னிலங்கை ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

யோதகவெவ, சந்தகிரிகம ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு இந்த உயிரினங்கள் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதுவரை 25 நாய்கள் உயிரிழந்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 150 தொன் ஒட்சிசன்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்துள்ள நிலையில், நோயாளிகளுக்கான ஒட்சிசன் தேவையும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், இந்தியாவின் விஷாகபட்டினம் மற்றும் சென்னையிலிருந்து சுமார் 150 தொன் ஒட்சிசன் வாயு அடங்கிய கொள்கலன்கள் கொழும்பை வந்தடைந்துள்ளது. (நி-4)

# ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை...




**விது**




**சானுஷா**




**ஷயானி**




**திவான்**




**கெங்காதர்**




**பிரதீபன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அதிகளவு தடுப்பூசி செலுத்திய நாடுகளில் இலங்கைக்கு முதலிடம்

(கொழும்பு)

நாட்டின் மொத்த சனத்தொகை அடிப்படையில் உலகில் அதிகளவில் கொவிட் தடுப்பூசி செலுத்தியுள்ள நாடுகள் தொடர்பான கடந்த வாரத்துக்கான தரப்படுத்தலில் இலங்கை முதலிடத்தைபிடித்துள்ளது.

Our World இணையத்தளத்தினால் வெளியிடப்பட்டுள்ள கடந்த வாரத்துக்கான தரவுகளின்படி, இது 13 சதவீதமாக காணப்படுகிறது.

ஈக்வடோர் 12.5 சதவீதத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

புருணை, நியூஸிலாந்துமற்றும்கியூபா முறையே 3, 4 மற்றும் 5 ஆவது இடங்களில் உள்ளன.

இது தொடர்பாக Our World நிறுவனத்தின் தலைவர் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ள அதே வேளை, குறித்த அறிக்கையை மேற்கோள் காட்டி கொழும்பிலுள்ள சீன தூதரகம் இலங்கைக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளது. (நி-4)

# ஐ.நா.கூட்டத்தொடரை சிறப்பாக கையாள நடவடிக்கை

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இம்முறை இலங்கை விவகாரத்தை சிறந்த முறையில் கையாள்வதற்கான நடவடிக்கைகள் நாட்டின் பொதுச் சட்டத்திற்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சட்டத்துறை, நீதித்துறை மற்றும் ஊடகத்துறை ஆகிய முத்துறைகளும் சுயாதீனமாக செயற்படுகின்றன. ஆகவே எதனையும் இரகசியமாக செயற்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்கதகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் இம்மாதம் 12 ஆம் திகதியும், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தொடர் எதிர்வரும் 21 ஆம் திகதியும் நடைப்பெறவுள்ளன. இவ்விரு கூட்டத்தொடர்களிலும் இலங்கை விவகாரம் நிச்சயம் கருத்திற் கொள்ளப்படும்.

மனித உரிமை பேரவை கூட்டத்தொடரின் போது இலங்கை விவகாரம் அதிகளவில் பேசப்படும். இம்முறை கூடவுள்ள கூட்டத்தொடரை சிறந்த முறையில் கையாள்வதற்கான நடவடிக்கைகள் இலங்கையின் பொதுச்சட்டத்திற்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் காணாமல் போனோர் விவகாரம், மீள்குடியமர்த்தல் மற்றும் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை அமைத்துள்ளார்.

ஆணைக்குழுவின்முதற்கட்ட அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலை புலிகள் அமைப்பின் போராளிகள் ஜனாதிபதியால் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஏனையோரையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் தலைமையில் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பிலான ஆலோசனை சபை நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை சபையின் ஊடாக எதிர்காலத்தில் சிறந்த தீர்மானங்கள் எடுக்கப்படும் என பீரிஸ் தெரிவித்தார். (நி-5)

# இணையத்தில் பகிரப்படும் படிவத்தை நிரப்ப வேண்டாம்

## சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு கொவிட் தடுப்பூசிசெலுத்தப்படுவதற்கான தகவல்களை உள்ளடக்குமாறு கோரி சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் விண்ணப்பப்பத்திரம் போலியானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவர் ரஞ்ஜித் பட்டுவத்துடாவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், குறித்த போலி விண்ணப்பப் பத்திரமானது சுகாதார அமைச்சினாலோ அல்லது சுகாதார அமைச்சுடன் தொடர்புடைய நிறுவனங்களினாலோ வெளியிடப்படவில்லை.

எனவே இணையத்தளத்தில் பகிரப்படும் விண்ணப்பப்பத்திரத்தை நிரப்ப வேண்டாம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பித்துக்குளிகள்

மனிதர்களிலே சில பேர் ரொம்ப வித்தியாசமாக நடந்துவார்கள். மற்றவர்களுக்கு அது ரொம்ப ஆச்சரியமாகக் கூட இருக்கும். அந்த ஆளு ஒரு மாதிரி பார்த்து நடந்துக்கொள்ள! என்று கூட சொல்கிறது உண்டு. இவர்களைப் பார்த்து நாம் பித்துக்குளி என்போம். உளவியல் இவர்களை Eccentrics என்று சொல்கிறது.

இவர்களை மனநோயாளிகள் என்று தவறாக புரிந்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் வேறே! இவர்கள் வேறே! Eccentrics பற்றிய சில விபரங்கள் ஒரு புத்தகத்திலே இருக்குது. ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒரு உளவியல் மருத்துவர் அதை எழுதியிருக்கார். அவர் பெயர் டாக்டர் டேவிட் வீக்ஸ் அவருக்கு ஒரு உதவியாளர். அவர் பெயர் கேட்வுட். இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து இங்கிலாந்து பூராகவும் சுற்றினார்கள்! மூன்று வருடங்கள் சுற்றினார்கள்.

நான் சொன்னது மாதிரி ஒரு மாதிரியாக இருக்கின்ற ஆட்கள் பல பேரை சந்தித்து பேசிப் பார்த்தார்கள். இது மாதிரி ஒரு ஆய்வு நடக்கிறது. இது தான் முதல் தடவை! பேசிப் பார்த்திட்டு அவர்கள் சொல்லியிருக்கிறதைக் கேட்டால் ரொம்ப ஆச்சிரியமாக இருக்கிறது!

நாம் இவர்களை பார்த்து பித்துக்குளி என்கிறோம். Ecentrics என்கிறோம். கிண்டல்கூட செய்கிறோம். ஆனால் அவர்களுடைய அறிவு ரொம்பவும் தெளிவானது! அவர்களுடைய உடல்நலமும் ரொம்ப நல்லா இருக்கிறது, அவர்களுக்கு மகிழ்ச்சியும் அதிகமாக இருக்கின்றது, ஆயுளும் அதிகமாக இருக்கின்றது. அவர்களில் பல பேர் என்ன சொல்கிறார்கள் என்றால் "நீங்கள் நினைக்கிறது மாதிரி இல்லை நாங்கள்... ஆனால் நாங்கள் மற்றவர்களிலிருந்து வேறுப்பட்ட தன்மையுள்ளவர்கள்". என்று ஒத்துக்கிறார்கள்.

இந்த உலகம் பிறந்ததிலிருந்தே இப்படிப்பட்ட வித்தியாசமான ஆசாமிகளும் பிறந்திருக்கிறார்கள். ஒரு மகாராஜா தன்னுடைய நாய்க்கு இலட்சக் கணக்கிலே பணம் செலவு செய்து கல்யாணம் செய்து வைத்தார். ஒரு கோமஸ்வர் தான் வளர்ந்துக் கொண்டிருந்த பூனைகளுக்கு தன்னுடைய சொத்து பூராகவும் எழுதி வைத்தார்.

இது மாதிரி ஒருத்தர் இரண்டு பேர் இல்லை நிறைய பேர் உண்டு. சில பேர் எப்படி தெரியுமா? அவர்களுக்கு வசதியிலே எந்த குறையும் இருக்காது. வீடு, கார், பணம் எல்லாம் தாராளமாக இருக்கும். அப்படி இருந்தாலும் அவர்களிடம் ஒரு பழக்கம் இருக்கும்.

யாராவது ஒரு நண்பர் வீட்டு விசேஷத்திற்கு போயிருப்பார் அல்லது கடைக்குப்போயிருப்பார். அவர்கள் ரொம்பவும் மரியாதையாக வரவேற்று எல்லாம் செய்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் இவர் அவர்களுக்குத் தெரியாமல் ஏதாவது ஒரு பொருளை திருடி 'பாக்கெட்டிலே' போட்டுக்கொண்டு வந்து விடுவார் அப்படி வந்தால் தான் அவருக்குத் திருப்தி.

பல பேர் அவர்கள் வளர்ந்த பிராணிகளுக்கு பளிங்குக்கல்லாலே சமாதி கட்டி வைத்திருக்கிறார்கள். பல பேர் அவர்களுக்கு பிடித்த மான ஒருத்தர் எப்படியோ அது மாதிரியே தலைமுடி, தாடி வைத்திருக்கிறது, டிரஸ் செய்கிறது, மலைக்குகையிலே போய் குடியிருக்கிறது. இப்படி எவ்வளவோ விநோதமான நடவடிக்கைகள்.

இவர்களை ஆய்வு செய்த டாக்டர் வீக்ஸ் என்ன சொல்கிறார் தெரியுமா? பொதுவாக இவர்களுக்கு உயர்ந்த புத்திசாலிகளாக இருப்பார்கள். ஒருமைப்பட்ட மனம், கருமமே கண்ணான பண்பு, தனிமையை நாடுகிற மனப்பான்மை எல்லாம் இவர்களுக்கு உண்டு.

அவர்களில் பல பேர் அவர்களின் பெற்றோர்களுக்கு முதல் குழந்தைகளாகவும் அல்லது ஒரே குழந்தைகளாகவும் இருக்கிறார்கள். இது மாதிரியானவர்களில் பெண்கள் ஒரு பங்கு என்றால் ஆண்கள் இரண்டு பங்கு! இவர்களெல்லாம் ஆக்க பூர்வமான செயல் புரிகிறவர்களாக இருக்கிறார்கள்.

அடுத்தவர்களிடம் அன்பு காட்டுகிறவர்களாக இருக்கார்கள். உற்சாக மூட்டுகிறவர்களாக இருக்கிறார்கள்.

அவர்களுடைய ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு ஊக்கம் கொடுத்தால் அவர்களின் மன சந்தோஷமும், உடல் நலமும் பெருகும், ஆயுளும் கூடும். இவைகளெல்லாம் அந்த டாக்டருடைய கண்டுப்பிடிப்புகள்.

பித்துக்குளித்தனத்திற்கும் மனநோய்க்கும் வித்தியாசம் உண்டு என்பதை சொல்கிறது தான் இன்றைக்குத் தகவல். என் நண்பன் ஒருத்தனைப் பற்றி சொல்கிறேன். அவன் எந்த வகை என்று நீங்களே முடிவு செய்துக் கொள்ளுங்கள்.

ஒரு கல்யாண வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வெளியே வந்தோம். வெளியிலே வந்தவுடனே ரொம்ப நேரமாக தன்னுடைய செருப்பை தேடிக் கொண்டிருந்தான். "என்னப்பா இன்னுமா உன் செருப்பு கிடைக்கலே?" என்றேன்.

"என்னுடையது முன்னாடியே கிடைத்து விட்டது. அதை விட நல்லதாக ஏதாவது கிடைக்குமா? என்று பார்க்கிறேன்!" என்றான்.




# லட்சுமி கடாட்சம்

வேகமாகசென்றமுனிவர்தனதுஇடது காலை தூக்கி மன்னனது கிரீடத்தை ஒரு உதை விட்டார்.

மறுநிமிடம், "அடி! உதை அவனை பிடி!" என்றபடியே ஆயிரம் சேவகர்கள் முனிவரை சூழ்ந்து கொண்டனர்.

உடனே அரசன்,"முனிவரை ஒன்றும் செய்யாதீர்கள். அவர் திரிகாலமும் உணர்ந்த ஞானி. என் கிரீடத்தை பாருங்கள்," என்றான்.

கிரீடத்தில் விஷநாகம் ஒன்று படமெடுத்து கொண்டிருந்தது. உடனே எல்லோரும் மகாபுருஷரை திட்டி விட்டோமே என்று நினைத்து வருந்தினர். அதற்குள் விஷநாகம் ஓடி மறைந்தது.

உண்மையில் அது விஷ நாகமல்ல. லட்சுமி தான் நாக உருவெடுத்து முனிவரை காப்பாற்றினாள்.

அன்றிலிருந்து அரசன் மாமுனிவருக்கு அமைச்சர் பதவிகொடுத்து சர்வ அதிகாரமும் கொடுத்தான்.



முனிவருக்கு லட்சுமி கடாட்சம் இருந்ததால் அவர் செய்த தெல்லாம் பலித்தது. முனிவரும் நாட்டை நல்ல முறையில் ஆண்டார்.

இரண்டு வருடங்கள் ஓடின. மீண்டும் ஒரு நாள் தன்னுடன் லட்சுமி இருக்கிறாளா என்பதை அரிய விரும்பினார் முனிவர்.

அன்றிரவு அரசனும், அரசியும் தூங்கிக் கொண்டிருந்த பள்ளியறைக்கு சென்றார். இருவரையும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்.

கண் விழித்த மன்னன் அந்த கிழவனின் தலையை வெட்டினால் என்ன என்று நினைத்து ஆத்திரம் கொண்டார். அதற்குள் பள்ளியறை கட்டடம் இடிந்து விழுந்தது. (தொடரும்)

# மகாபாரதம்

174



தருமர் "இம்மையிலும் மறுமையிலும் அரசனுக்கு நன்மை தரக்கூடிய குணங்கள் யாவை?" என்று பீஷ்மரிடம் கேட்க பீஷ்மர் சொல்கிறார்.

"ஒரு மன்னன் 36 குணங்களைக் கடைபிடிக்க வேண்டும். அவை,

விருப்பு, வெறுப்பு இன்றித் தர்மங்களைச் செய்தல், பரலோகத்தில் விருப்புடன் நட்புப் பாராட்டுதல், அற வழியில் பொருளை ஈட்டுதல்.

அறம்பொருள்கட்கு அழிவின்றி இன்பத்தைப் பெறுதல், யாருடனும் அன்புடன் பேசுதல்.

நல்லவர் அல்லாதார்க்குத்தராத கொடையாளியாக இருத்தல், தற்புகழ்ச்சியின்றி இருத்தல், கருணையுடன் இருத்தல், கெட்டவர்களுடன் சேராது நல்லவர்களுடன் சேர்ந்திருத்தல்.

பகைவன் எனத் தீர்மானித்துப் போரிடல், நற்குணம் அற்றவரிடம் தூதர்களைச் சேராது இருத்தல், பிறர்க்குத் துன்பம் தராது பணி புரிதல், சான்றோரிடம் பயனை அறிவித்தல், பிறரது குணங்களை மட்டுமே கூறுதல், துறவியர் அல்லாதாரிடம் கப்பம் வாங்குதல்.

தக்காரைச் சார்ந்திருத்தல், நன்கு ஆராயாமல் தண்டனை தராதிருத்தல், ரகசியத்தை வெளியிடாதிருத்தல், உலோபிகள் அல்லாதார்க்குக் கொடுத்தல்.

தீங்கு செய்பவரை நம்பாதிருத்தல், அருவருப்படையாமல் மனைவியைக் காத்தல், தூய்மையுடன் இருத்தல், பல பெண்களுடன் சேராதிருத்தல்.

நலம் பயக்கும் கலைகளை உண்ணுதல், வழிபடத் தக்கவர்களைக் கர்வம் இன்றி வழிபடல், வஞ்சனையின்றிப் பெரியோர்க்குப் பணிவிடை செய்தல்.

ஆடம்பரமின்றித் தெய்வ பூஜை செய்தல், பழிக்கு இடமில்லாப் பொருளை விரும்புதல், பணிவுடன் பணி புரிதல், காலம் அறிந்து செயல் படுவதில் வல்லவனாய் இருத்தல், பயனுள்ளவற்றையே பேசுதல்.

தடை சொல்லாது உதவி புரிதல், குற்றத்திற்கேற்ப தண்டித்தல், பகைவரைக் கொன்றபின் வருந்தாதிருத்தல், காரணமின்றிச் சினம் கொள்ளாதிருத்தல், தீங்கு செய்தவரிடம் மென்மையாக இராமை ஆகியவை யாகும்.

(தொடரும்)

இறைவனை நேசிப்பவருக்கு எல்லாக் காரியங்களும் சாதகமாகி நலமே அதிகரிக்கும்.

– புனிதர் பவுல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தேரோடும் திருவீதி மறந்ததேன் முருகா!

நல்லூர்க் கந்தனின் தேரோடும் திருநாள் இன்று.

சண்முகப்பெருமான் தேரேறும் காட்சியைக் காண இலட்சக்கணக்கான அடியார் கூட்டம் அலைமோதும்.

வைகறைப் பொழுதில் தேரோடும் திருவீதியில் அங்கப்பிரதட்சணம் செய்வோர் ஒருபுறம். நால் வீதியெங்கும் பஜனை பாடியவண்ணம் நல்லூரை வந்தடையும் அடியார் கூட்டம் மறுபுறம்.

காவடிகள், கரகாட்டங்கள், கற்பூரச் சட்டி ஏற்றுவோர் என நேர்த்திக்கடன் தீர்ப்போர் ஏராளம்.

இதற்கு மேலாக, அலைகடலெனத் திரளும் அடியார் கூட்டத்துக்கு அமுதளிக்கவும் தாகம் தீர்க்கவும் தம்மையே அர்ப்பணித்து பணியாற்றும் தொண்டர் குழாம் என நல்லூர்த் தேர்த் திருவிழா பெருவிழாவாய் அமையும்.

நல்லூரில் வீற்றிருக்கும் சண்முகப்பெருமான் தேரேறி திருவீதி வருவதைக் கண்டுவிட வேண்டும் என்பதற்காய் நல்லூர் வீதியெங்கும் அடியார் கூட்டம் காத்திருக்கும் அந்தத் திருநாள் இன்று.

என் செய்வோம். சண்முகப்பெருமான் தேரேறி வருகின்ற திருக்காட்சியைக் காண முடியாத அபாக்கியசாலிகள் நாமாயிற்று.

ஓ! நல்லூர்க் கந்தவேளே! நீயின்றி நமக்கு யார்தான் துணை என்றிருக்க, நீ மட்டும் தேரேறித் திருவீதி வருவதை ஏன் தவிர்த்தாய்.

எங்களை வெறுத்தன்றோ நீ தேரேறாது தவிர்த்தாயோ சொல் முருகா!

ஓ! உனக்கென்ன குறை. உள்வீதி உனக்குப் பெருவீதி. கைலாச வாகனம், வேல் விமானம், தங்கரதம், சப்பறம், தேர் என எல்லா அடுக்கும் உள்வீதியில் உனக்குண்டல்லோ.

தீர்த்தமும் உன் திருவீதிக்குள் அடங்கி இருக்க, உனக்கென்ன குறை முருகா!

நாங்களல்லோ உன் திருமேனி காணாமல் ஏங்கிக் கிடக்கின்றோம்.

நாளொரு வாகனம். பொழுதொரு அலங்காரம் என நீ கொலுவீற்றிருக்கும் காட்சி கண்டால் அதுவல்லோ பேறு என்றிருப்போம்.

அதிலும் சண்முகப்பெருமானாய் நீ ஆடியும் அசைந்தும் ஓடியும் வந்து தேரேறும்போது எம் உள்ளமெல்லாம் மின்னல் தாக்கியதாய் பொங்கும். கண்கள் கண்ணீர் சிந்தும், கைகள் தலை மேல் குவியும். நல்லூர் இராசதானியை ஆளும் தமிழ்த் தலைவா! முருகா! உனக்கு அரோஹரா என்று நா முழங்கும்.

எல்லாம் இழந்த வெறுமையாய் நம் செய்பிழை சொல்லாமல் நீ மாத்திரம் உள்வீதியில் உலா வருவது சரியாமோ!

போர் தொடுத்த சூரனுக்கும் நின் திருப்பெரு வடிவம் காட்டியவா! யாம் செய் பிழை பொறுத்தருள்வாய் முருகா! கொரோனாப் பெருந்தொற்றை வேரறுத்து உலகை உய்யவை முருகா!

# கொரோனாவால் பாதிக்கப்பட்ட 180 சிறுவர்கள் மருத்துவமனையில்

(கொழும்பு)

கோவிட் வைரஸால் பாதிக்கப்பட்ட 180 சிறுவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் இரு சிறுவர்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிகாரப்பூர்வமற்ற தகவல்களின்படி, 105 சிறுவர்கள் சீமாட்டி ரிட்ஜ்வே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அதில் 18 பேர் ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க சிறுவர் மருத்துவமனையில் 35 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு இரண்டு இறப்புக்கள் பதிவாகியுள்ளன. மற்றும் ஒரு சிறுவன் ஆபத்தான நிலையில் உள்ளான். கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் ஏழு சிறுவர்கள் இறந்துள்ளதாக தெரியவருகிறது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 3 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டனர், ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 30 சிறுவர்களில் 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும் இருவர் உயிருக்கு போராடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பைசர் தடுப்பூசியை 20 - 30 அகவையினருக்கு, வழங்காமல் 12 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தற்போது வழங்குவது சிறந்த தீர்வாக இருக்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

12 அகவைக்கு மேற்பட்ட பாடசாலை சிறுவர்களுக்கு உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே தடுப்பூசி பைசர் மட்டுமே என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

# இலங்கைக்கான பயணத் தடையை நீக்க பிலிப்பைன்ஸ் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட நாடுகளின் மீதான பயணத் தடையை நீக்க பிலிப்பைன்ஸ் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி இலங்கை உள்ளிட்ட 10 நாடுகளுக்கு விதித்துள்ள பயணத் தடை நீக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

நாளைமுதல் இந்த பயணத் தடையானது நீக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் அந்நாட்டு அரசாங்கத்தால் இலங்கை உள்ளிட்ட 10 நாடுகளில் இருந்து பயணிகள் வரத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் பயணத் தடை நீக்கப்பட்ட பின் பிலிப்பைன்ஸிற்கு வருபவர்கள் இரு வார தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# கோவிட் தொற்றினால் அக்காவும் தம்பியும் வீட்டிலேயே மரணம்

(கொழும்பு)

கொரோணா வைரஸ் தொற்றால் அக்காவும் தம்பியும் வீட்டுக்குள்ளேயே உயிரிழந்துள்ள பெருந்துயரச் சம்பவம் கம்பஹா மாவட்டத்தின் புகொடை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்குள் இருந்து அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆடைத்தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் 43 வயதுடைய அக்காவும் ஓட்டோ சாரதியாகப் பணியாற்றும் 38 வயதான தம்பியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலங்கள் வத்துபிட்டிவல வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-3)

# கோவிட் தொற்றாளர் 5 ஆவது மாடியிலிருந்து குதித்து தற்கொலை

(கண்டி)

கண்டியில் கோவிட் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த கோவிட் தொற்றாளரொருவர் தற்கொலை செய்துக்கொண்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

கண்டியினைச் சேர்ந்த 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


கண்டி வைத்தியசாலையின் 5ஆவது மாடியில் இருந்து குதித்து இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார். (ம-3)

# முல்லைத்தீவில் உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா

முல்லைத்தீவில் 71 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை ஊடாகயாழ். போதனா வைத்தியசாலைக்கு அவரின் பிசிஆர் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட நிலையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த பெண்ணுக்கு தொற்றுஉறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖"சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில், இறையாட்சி இத்தகையோருக்கே உரியது

❖"உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்.

❖செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம். அவர்கள் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது"

❖முதன்மையானோர் பலர் கடைசி ஆவர் கடைசியானோர் முதன்மை ஆவர்"

❖உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று"

❖நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால், மன்னித்துவிடுங்கள். அப்போது உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்"

# மாகாண சபைத் தேர்தல்கள்

**27**



கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

சப்ரகமுவ மாகாண சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, இலங்கைத் தொழிலாளர் சங்கம், ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, ஐக்கிய சோசலிசக்கட்சி, இடதுசாரி முன்னணி, ருஹுனு ஜனதா பக்சய, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, ஜாதிக சங்வர்தன பெரமுன, எக்ஸத் லங்கா மஹா சபா, சுயேச்சைக் குழு ஆகியன போட்டியிட்டன.

இத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 14இல் தரப்பட்டுள்ளது.

### மாகாண சபைகள் கலைப்பு

அரசியலமைப்பின் 154உ உறுப்புரைக்கிணங்க மாகாண சபையொன்றின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்பதோடு, 154ஆ (8) இ உறுப்புரைக்கமைய அதற்கு முன்னரும் கூட, ஒவ்வொரு மாகாண சபையும் உரிய ஆளுநர்களால் 154ஆ(8)ஈ உறுப்புரையின் கீழ் கலைக்கப்பட முடியும்.

அதற்கிணங்க வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபைகள் சார்பாக 2004 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேர்தலுக்கிணங்க நிறுவப்பட்ட அனைத்து மாகாண சபைகளினதும் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் நிறைவடைய கலைக்கப்பட்டன.

| அட்டவணை 14 - வட மத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள்-2008 வாக்களிப்பு | A | B | C | D |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 569,417 | 382,677 | 17,900 | 364,777 |
| பொலநறுவை | 277,056 | 190,845 | 10,182 | 180,663 |
| வட மத்திய மாகாணம் | 846,473 | 573,522 | 28,082 | 545,440 |
| இரத்தினபுரி | 713,205 | 497,013 | 25,769 | 471,244 |
| கேகாலை | 605,621 | 404,660 | 21,528 | 383,132 |
| சப்ரகமுவ மாகாணம் | 1,318,826 | 901,673 | 47,297 | 854,376 |

தேர்தல் முடிவுகள் அட்டவணை 15A மற்றும் 15B ல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 15A

வட மத்திய மாகாண சபைத் தேர்தல் -2008

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | JVP | மொத்தம் |
| அநுராதபுரம் | 12 | 8 | 1 | 21 |
| பொலநறுவை | 6 | 4 | - | 10 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 20 | 12 | 1 | 33 |

ஐமசுமு- ஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டணி, ஐதேக-ஐக்கியதேசியக்கட்சி, JVP-மக்கள் விடுதலை முன்னணி

அட்டவணை 15B

சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்-2008

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | JVP | மொத்தம் |
| இரத்தினபுரி | 13 | 10 | 1 | 24 |
| கேகாலை | 10 | 7 | 1 | 18 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 25 | 17 | 2 | 44 |

ஐமசுமு- ஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டணி, ஐதேக-ஐக்கியதேசியக்கட்சி, JVP-மக்கள் விடுதலை முன்னணி

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் முற்றுப்பெற்று மிகக் குறுகிய ஒரு காலக்கெடுவுக்குள் அதாவது 2008.12.08 ஆம் திகதிய 1579/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக மத்திய மாகாண சபையும், அதே திகதிய 1579/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக வடமேல் மாகாண சபையும், மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளின் வாக்கெடுப்புக்கள் முடிவடைய முன்னர் அதாவது 2009.01.29 ஆம் திகதிய 1586/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக மேல் மாகாண சபையும், மேல் மாகாண சபைக்கான தேர்தலைத் தொடர்ந்து அதாவது 2009.05.28 ஆம் திகதிய 1603/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக ஊவா மாகாண சபையும், ஊவா மாகாண சபைக்கான தேர்தல் முடிவடைய முன்னர் அதாவது 2009.08.03 ஆம் திகதிய 1613/01 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக தென் மாகாண சபையும் உரிய ஆளுநர்களினால் கலைக்கப்பட்டன.

ஒவ்வொரு மாகாண சபையினதும் பதவிக்காலம் முடிவடைதல் மற்றும் கலைக்கப்படல் என்பன மேற்கொள்ளப்பட்ட திகதிகள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 16இல் தரப்பட்டுள்ளன.

### மத்திய மாகாண சபைக்கும் வடமேல் மாகாண சபைக்குமான தேர்தல்கள் -2009

மத்திய மாகாணசபை மற்றும் வடமேற்கு மாகாண சபை 2008.12.08 ஆம் திகதி கலைக்கப்பட்டமையால் தேர்தல்கள் ஆணையாளரினால் 2008.12.10 ஆம் திகதிய 1579/12 ஆம் அதிவிசேட வர்த்தமானி மூலம் வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டது.

வேட்புமனுக் காலக்கெடு 2008.12.24 ஆம் திகதியன்று ஆரம்பித்து 2008.12.31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முடிவடைந்தது.

குறித்த வேட்புமனுக் காலக்கெடுவுக்குள் மத்திய மாகாண சபைக்காக 16 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 38 வேட்புமனுக்களும் 29 சுயேச்சைக் குழுக்களிலிருந்து 29 வேட்புமனுக்களுமாக மொத்தம் 67 வேட்புமனுக் கள் கையளிக்கப்பட்டன. கண்டி மாவட்டத்திற்காக இரண்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாலும் மற்றும் இரண்டு சுயேச்சைக் குழுக்களாலும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதோடு நுவரெலியா மாவட்டம் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களில் ஒரு சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

இதற்கிணங்க, மத்திய மாகாண சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் கீழ் 36 வேட்புமனுக்களிலிருந்து 752 வேட்பாளர்களும் சுயேச்சைக் குழுக்களின் கீழ் 26 வேட்புமனுக்களிலிருந்து 558 வேட்பாளர்களும் மொத்தம் 1310 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அதில் மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்படவிருந்த உறுப்புனர்களின் எண்ணிக்கை 56 ஆகும்.

வடமேல் மாகாண சபைக்காக 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 22 வேட்புமனுக்களும் சுயேச்சைக் குழுக்களிடமிருந்து 20 வேட்புமனுக்களுமாக மொத்தம் 42 வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டன. அவற்றில் குருநாகல் மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வேட்புமனுவும் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன. புத்தளம் மாவட்டம் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களில் நிராகரிக்கப்பட்டவை அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாலும் சுயேச்சைக் குழுவொன்றாலும் சமர்ப்பிக்கப்பட்டவை மாத்திரமேஆகும்.

அதற்கிணங்க, வடமேல் மாகாண சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் கீழ் 524 வேட்பாளர்களும் சுயேச்சைக் குழுகளின் கீழ் 413 வேட்பாளர்களும் என்றவகையில் மொத்தம் 937 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அதில் மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்படவிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 மாத்திரமே ஆகும்.

அட்டவணை 16

| மாகாண சபை | வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட திகதி | மாகாணசபையின் முதலாம் கூட்டத் திகதி | பதவிக்காலம் முடிவடையவிருந்த திகதி | கலைக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| மத்திய | 2004.07.10 | 2004.08.05 | 2009.08.04 | 2008.12.08 |
| வடமேல் | 2004.04.24 | 2004.05.18 | 2009.05.17 | 2008.12.08 |
| மேல் | 2004.07.10 | 2004.08.04 | 2009.08.03 | 2009.01.29 |
| ஊவா | 2004.07.10 | 2004.08.05 | 2009.08.04 | 2009.05.28 |
| தென் | 2004.07.10 | 2004.08.16 | 2009.08.15 | 2009.08.03 |

(தொடரும்...)

## அச்சுவேலியில்...

காட்டைச் சேர்ந்தவரான அரச பேருந்துச் சாரதி மதனபாலன் கடந்த 2ஆம் திகதி மின்னல் தாக்கியதில் உயிரிழந்திருந் தார்.

அவரின் இறுதி நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

அல்வாயில் வைத்து இறுதிநிகழ்வு நடை பெற்று பின்னர் சடலம் அச்சுவேலியில் உள்ள நாவற்காட்டில் உள்ள வீட்டிலும் இறுதிச் சடங்குகள் நடைபெற்றுள்ளன.

அதன் பின்னர் அச்சுவேலி முழாங்கன் மயானத்திற்கு சடலம் கொண்டு செல்லப் பட்டது.

அவர் பயன்படுத்திய அரச பேருந்தும் இறுதிச் சடங்கில் பங்கேற்றது. பருத் தித்துறை வீதியூடாக இடம்பெற்ற பயணத் தின்போதும் மயானத்திற்குச் சென்ற போதும் பல நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஒரே நாளில்...

துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளி யிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 9,951 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 68 பெண்களும் 77 ஆண்களும் உள்ளடங்குவதாக அர சாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## காத்தான்குடி...

காத்தான்குடியைச் சேர்ந்த எம்.சம்சுதீன் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இவர் தனது 7 வயதில் வெளிநாடு சென்றுள்ளார். நாடு திரும்பியதன் பின் கொழும்பு இந்துக் கல்லூரியில் கல்வி கற் றுள்ளதாகவும் பின்னர் 2011 ஆம் ஆண்டு நியூசிலாந்து சென்றுள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரது ஒரு சகோதரியும் தந்தை யாரும் கனடாவில் வசிக்கும் நிலையில், ஏனைய இரண்டு சகோதரர்களும் கட்டார், சவுதியில் வசிக்கின்றனர்.

குறித்த நபர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப் புடன் தொடர்புடையவர் என்று நியூசி லாந்து அரசு அறிவித்துள்ளது.

மேலும் காத்தான்குடியைச் சேர்ந்த குறித்த நபரின் தாயாரிடம் தீவிர விசா ரணைகளை இலங்கை புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டு வருகின்ற னர்.

நேற்றுக் காலை தொடக்கம் முப்படை யினரும் இணைந்து தீவிர விசாரணை யில் ஈடுபட்டனர்.

காத்தான்குடியில் பிறந்து 2011ஆம் ஆண்டு நியூசிலாந்து சென்ற குறித்த இளைஞன் நியூசிலாந்தில் வசித்து வரும் காலத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின்பால் ஈர்க்கப்பட்டார் என்று நியூசிலாந்து அரசாங்கம் தகவல் வெளி யிட்டுள்ளது. (ம-3)

## +3,333...

டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறித்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், இலங்கையில் இதுவரையில் தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டோரின் மொத்த எண் ணிக்கை 4 இலட்சத்து 49 ஆயிரத்து 459 ஆக அதிகரித்துள்ளது.

குணமடைந்தவர்களின் மொத்த எண் ணிக்கை3 இலட்சத்து 82 ஆயிரத்து 476 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ம-3)

## மதுச்சாலைகள்...

என மதுவரித் திணைக்களத்தின் ஆணை யாளர் எம்.ஜே.குணசிறி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் இந்த நட்டம் ஏற்பட் டுள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள் ளார்.

மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ள தால் நாளொன்றுக்கான நட்டம் 700 கோடி ரூபாய் என மதுவரித் திணைக்களம் தெரி வித்துள்ளது. (ம-3)

## காரைநகரில்...

மேலும் தெரியவருவதாவது,

கடந்த சில நாட்களுக்கு முன்னர் காரைநகரில் நூறுக்கும் அதிகமானவர் கள் சுகாதார நடைமுறைகளைப் பின் பற்றாமல் திருமண நிகழ்வு ஒன்றில் பங்கு கொண்டிருந்தனர் என்ற அடிப்படையில் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டிருந் தனர்.

அதன் தொடராக, அதில் பங்கு கொண்ட வர்களை கொரோனாப் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

அதன் ஒரு கட்டமாக திருமண நிகழ்வு வீட்டாருக்கு நேற்று பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டது.

இதன்போது பிசிஆர் பரிசோதனைக் கருவியை அவர்களில் ஒருவர் தட்டிவிட்ட துடன், அங்கிருந்த மூவர் சுகாதார வைத் திய அதிகாரியை 2 தடவைகள் தாக்க முற்பட்டதுடன் பொதுச் சுகாதார உத்தி யோகத்தர்கள் மீதும் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவத்தையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அவர்களில் மூவரைக் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## இன்று தேர்...

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவிலின் தேர்த் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உள்வீதியில் தேர்த் திருவிழா உற்சவம் நடைபெறும்.

காலை வசந்த மண்டபப் பூஜை இடம் பெற்று முருகப் பெருமான் உள்வீதியில் வலம் வருவார். (ம-3)

## ஐ.நா மனித...

தேசியக் கட்சிகளின் ஒருமித்த நிலைப் பாடாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தமிழ் மக்கள் கூட்டணி யின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக் கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்ன ணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந் திரன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோரின் கையொப்பத்துடன் விரிவான அறிக்கை ஒன்று ஐ.நா மனித உரிமை ஆணை யாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 46/1 பிரே ரணைக்கு பின்னராக தமிழர் தாயகத்தில் இலங்கை அரசாங்கத்தினால் முன் னெடுக்கப்படும் தமிழினத்துக்கு எதிரான விடயங்களான காணிஅபகரிப்பு, தொல்லி யல் சார்ந்த நடவடிக்கைகள், நினைவேந் தல்களுக்கான தடைகள், பயங்கரவாத தடைச்சட்டத்தின் அடிப்படையிலான கைது கள், சட்ட நடவடிக்கைகள், தடுத்து வைத் தல், காணாமல் ஆக்கப்பட்டோர் அலு வலகங்களில் இராணுவ அதிகாரிகளை நியமித்தல், காணாமல் ஆக்கப்பட்டோரை தேட வேண்டிய அவசியம் இல்லை என்ற அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு, பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை யிலான மக்கள் பேரெழுச்சி பயணத்தின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் விசா ரணைகள், கைதுகள், அண்மையில் அரசினால் அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தினாலும் தமிழ் மக்கள் எதிர்நோக் கும் அபாயநிலைகள் என்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம-3)

## வைத்தியசாலை...

கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தவர் களின் சடலங்களை எதிர்வரும் 9ம் திகதியே தகனம் செய்யமுடியும் என்று நேற்றுக் காலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் ஐந்து சடலங்கள் என்ற அடிப்படையில் சடலங்கள் எரியூட்டப்படு வதால் சிக்கல் நிலவுவதாக தெரிய வரு கிறது. நாள்தோறும் ஐந்துக்கும் அதிக மான மரணங்கள் கடந்த சில நாட்களில் பதிவாகியுள்ளன.

இதன் அடிப்படையில் 30ற்கும் அதிக மானோரின் சடலங்கள் தேங்கியிருக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து மத்திய சுகாதார சேவை கள் திணைக்களத்திற்கு அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டியுள்ள வடக்கு சுகாதாரத் திணைக்களம் சடலங்களை தொடர்ந்தும் பராமரிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன.

எனவே மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக குறிப் பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு மாகாணத்தில் கோவிட் - 19 நோயினால் உயிரிழந்த 52 பேரின் சடலங்கள் சுகாதாரக் கட்டுப்பாடு களின் கீழ் தகனம் செய்ய முடியாத நிலை யில் காணப்படுவதாக சுகாதாரத் துறை யின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றில் யாழ்ப்பாணத்திலிருந்து 3 சடலங்கள் ஹிங்குராவைக்கும் கிளிநொச்சி யிலிருந்து 5 சடலங்கள் பொலநறுவைக் கும் கொண்டு செல்லப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழப்போரின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது. வடக்கில் தினசரியாழ்ப்பாணத்தில் 5 சடலங்களும் வவுனியாவில் 7 சடலங்களும் எரியூட்டப் படுகின்றன. எனினும் கோவிட்-19 நோயி னால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது.

அதனால் டோக்கன் அடிப்படையில் மருத்துவமனைகளில் இருந்து சடலங்கள் பெறப்பட்டு மின் தகனம் செய்யப்படுகின் றன. எனினும் தேக்கநிலை காணப் படுவதால் உறவினர்களிடம் ஒப்புதல் பெற்று மாகாணத்துக்கு வெளியில் சட லங்களை அனுப்பிஎரியூட்டும் நிலை ஏற் பட்டுள்ளது என்று சுகாதாரத் துறையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3,18,33)

## நாட்டில் மாத...

நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் பேர் தொற்றாளர் களாக இனங்காணப்படும் அபாயம் உள்ளதுடன், மாதமொன்றுக்கு 10 ஆயி ரம் பேர் உயிரிழக்கும் அவலநிலை ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகக்குழு உறுப்பினருமான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரித்துள்ளார்.

நாட்டில் தற்போது பதிவாகும் கொரோனா மரண வீதமானது இந்தியாவைவிட ஐந்து வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெயரளவில் மாத்திரம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இந்தத் தனிமைப்படுத் தல் ஊரடங்கில் 90 சதவீதமான மக்கள் வீட்டுக்குள்ளே முடங்கி இருந்தால் மாத் திரமே கொரோனாத் தொற்றைக் கட்டுப் படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார்.

நாடு தற்போது எச்சரிக்கை நிலை நான்கில் உள்ளது. இது சிவப்பு எச்சரிக்கை யையும் சமூகபரவலையும் குறிக்கின்றது. மேலும் தென்னாபிரிக்காவில் பரவும் சி12 எனப்படும் புதிய கொரோனாத் திரிபும் இலங்கையில் பரவும் அபாயம் உள்ளது எனவும் அவர் கூறினார். (ம-3)

## வடக்கில் 10 பேர்...

கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ள னர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்ற வேலணை யைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒரு வரும் நீர்வேலியைச் சேர்ந்த 56 வயது டைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ள னர்.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கீரிமலையைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 99 வயதுடைய பெண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அவரது சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட்-19 தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

மந்திகை ஆதார மருத்துவமனை கோவிட்-19 விடுதியில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையைச் சேர்ந்த 77 வயது டைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லையில் உயிரிழந்த பெண் ஒரு வருக்கு யாழ்.போதனா வைத்தியசாலை யில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

மேலும் வவுனியாவில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத நான்கு பேர் கோவிட் தொற்றுக் காரணமாக நேற்று மரண மடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கோவிட் தொற்று தீவி ரம் அடைந்துள்ள நிலையில் பலரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வரு கின்றனர்.

இந்நிலையில் கோவிட் தொற்று காரண மாக கோவிட் தடுப்பூசி எதனையும் பெற் றுக் கொள்ளாத 32 வயது இளைஞன் உட் பட நான்கு பேர் மரணமடைந்துள்ளனர்.

32 வயது இளைஞன் தவிர்ந்த ஏனைய மூவரும் 60 வயதிற்கு மேற்பட்ட வர்களாவர். குறித்த நான்கு பேரது சடலங் களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,18,33,250,299)

## ஒக்ரோபர் 2...

நிலைமையிலேனும் போக்குவரத்துக் களை கட்டுப்படுத்துவதன் மூலம் பாதுகாக் கக்கூடிய உயிர்களைக்கருத்திற்கொண்டு, தற்போதைய முடக்கத்தை ஒக்ரோபர் 2 ஆம் திகதிவரையும் நீடிக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ம-3)




# மரண அறிவித்தல்



## திருமதி மாக்கிறேற் செல்வராணி

கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு புதுச்செட்டித் தெருவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாக்கிறேற் செல்வராணி நேற்று (04.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - லேயினாப் பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - கத்தரின்அம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் பிரான்சிஸ் போலின் அன்பு மனைவியும் சூசானா செல்வரஞ்சினி, கிறிஸ்ரி ராஜ்குமார், சேவியர் சுரேஸ்குமார், ஸ்ரெலா சாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வின், வதனி, றேபோ, நிரஞ்சித் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெரேமியா, ஜெனிபர், ஜொனத்தன், ஹரி, நிவோயா, அனிக்கா, லாலிந்தன், டிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை, மரியமுத்து, அன்னம்மா மற்றும் செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் கரணவாய் கிழக்கு கரவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இறுதி ஆராதனைக்காக கரவை பரலோக அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் கரவை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

077 711 1011

தகவல்:-
குடும்பத்தினர்

# வடக்கில் 102 பேருக்குத் தொற்று

யாழ்.மாவட்டத்தில் 34 பேர், மன்னார் மாவட்டத்தில் 24 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 102 பேருக்கு பிசிஆர் பரிசோதனைகள் ஊடாக தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 437 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு, கரந்தன் பகுதியில் 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு - 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்

**காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை**

**( தரகர் தேவையில்லை )**

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(7855)

**077 814 7389, 077 614 7333**

# கண்ணீர் அஞ்சலி

எமது நீண்டகால நண்பர்

**அளவையூர் நாதஸ்வர ஆளுமை**

**கலாபூசணம்**

## செல்லத்துரை சிதம்பரநாதன்

அவர்கள் இறைபதமடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C 2617)



**ரூபி ஜுவல்லறி - உரிமையாளர்கள்**

இல. 227 - 229 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.